26th February 1955]

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, I agree to the suggestion of the hon. the Leader of the Opposition. The Plantations Agricultural Income-tax Bill may be taken up after the general discussion on the budget is over, that is, on the 5th March. On the 4th March we complete the discussion on the budget. We shall sit on the 5th March for considering this Plantations Agricultural Income-tax Bill."

III.—MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN :—" I have to announce to the House that I have received the following message, dated the 25th February 1955, from the Hon. the Speaker, Madras Legislative Assembly :—

'In accordance with rule 114 of the Madras Assembly Rules, I transmit a copy of the Madras General Sales Tax (Amendment) Bill, 1955 (L.A. Bill No. 4 of 1955), as passed by the Assembly on the 25th February 1955 and signed by me for the concurrence of the Council.' "

IV.—BUDGET FOR THE YEAR 1955-56.

SRI A. GAJAPATHY NAYAGAR :—" மன்றத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விண்ணப்பம். இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தை தமிழில் படிக்கும்படி சபைத் தலைவரை வேண்டிக் கொள்கிறேன். கனம் நிதி மந்திரி அவர்கள் கீழ் சபையில் பட்ஜெட் பிரசங்கத்தை ஆங்கிலத்தில் படித்தார்கள். பட்ஜெட் பிரசங்கம் தமிழில் அச்சடிக்கப்பட்டிருந்தும், அதைத் தமிழில் படிக்கவில்லையென்றால், அது ஒரு குறையாகவும், குற்றமாகவுமிருக்கும். ஆகவே, இந்த சபையில் பிரசங்கத்தைத் தமிழில் படிக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்."

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கனம் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ கஜபதி நாயகர் அவர்கள் விடாமல் எப்பொழுதும் தமிழிலேயே பேசுவதாயிருந்தால் நானும் அவருடைய கோரிக்கைக்கு சம்மதித்திருப்பேன். அவரே இதற்கு ஒரு வழி காட்டவில்லை. அவருக்கு தோன்றிய சமயங்களிலெல்லாம் ஆங்கிலத்தில் சிறந்த நடையில் பேசுகிறார். அதற்குக் கண்டனமாக அவருடைய கோரிக்கையை நான் ஒத்துக்கொள்ளவில்லை. பட்ஜெட் பிரசங்கம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, எல்லா அங்கத்தினர்களுக்கும் வினியோகிக்கப் பட்டிருக்கிறது. அதை அவர் படித்துக்கொள்ளலாம். கனம் நிதி மந்திரி அவர்கள் கீழ் சபையிலே நிகழ்த்திய பிரசங்கத்தை இங்கே திருப்பிச் சொல்வது சரியல்ல. ஆகவே, சுருக்கமாகச் சில வார்த்தைகளைச் சொல்லி, இந்த ஆண்டு பட்ஜெட்டை சபை முன்பு சமர்ப்பிக்கலாமென்று நினைக் கிறேன்."

* SRI A. SUBRAMANYAM :—" கனம் தலைவர் அவர்களே, ஒரு அங்கத்தினர் தவறு செய்திருந்தால், அதற்காக எல்லா அங்கத்தினர்களும் தவறு செய்திருக்கிறார்கள் என்று கனம் மந்திரி அவர்கள் கருதக்கூடாது. ஒரு அங்கத்தினர் ஒரு காரியத்தில் ஈடுபட்டு, அதைத் தொடர்ந்து நடத்தாமல் விட்டுவிட்டால், மற்ற அங்கத்தினர்களும் அம்மாதிரியே செய்வார்கள் என்று கனம் மந்திரி அவர்கள் நினைக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, தமிழில் பட்ஜெட் பிரசங்கம் அச்சடிக்கப்பட்டிருப்பதால், தமிழிலேயே அதை வாசிக்கும்படி சபைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்."